# டிசம்பர், 2016 – எண்ணெய் பனை சாகுபடிக்கான ஆலோசனைகள்

- ❖ மூன்றாம் ஆண்டிலிருந்து ஏக்கருக்கு 148 கி யூரியா, 213 கி சிங்கள் சூப்பர் பாஸ்பெட் , 114 கி மியுரடே ஆப் பொட்டாஷ் ஐ 4 தவணைகளிலும், 28 கி மக்னீசியம் சல்பேட் ஐ 2 தவணைகளிலும் ஒவ்வொரு வருடமும் இட வேண்டும்.

- ❖ எண்ணெய்ப்பனையில் ஊடுபயிர் செய்யும் போது, தண்டு மற்றும் வேர் பகுதியை ஒட்டி உழவு செய்ய கூடாது. இலைகளை ஒன்றுடன் ஒன்று சேர்த்து கட்டவோ, மட்டைகளை வெட்டவோ கூடாது. அப்படி செய்வதால் மகசூல் குறையும்.

- ❖ எண்ணெய்ப்பனையில், முதல் மூன்று வருடத்தில் மஞ்சரிகளை நீக்குவது மிக முக்கியம். இவ்வாறு நீக்குவதால், பனையின் தண்டு மற்றும் வேர் நன்கு வளர்ச்சியடையும்.

- ❖ எண்ணெய்ப்பனைத் தோட்டங்களில், நுனி இலைகள் கொக்கி வடிவத்தில் மாறுவது (ம) மீன் முள் தோற்றத்துடன் இருப்பது போரான் குறைபாடாகும். இதை கட்டுப்படுத்த 100 கிராம் போராக்ஸ் ஐ , மண் (ம) இலை பரிசோதனைக்கு பின் பயன்படுத்தலாம்.

❖ எண்ணெய்ப்பனைத் தோட்டங்களில், தழை: சாம்பல் சத்து சமநிலையின்மையால் இளம் இலைகளின் இரு பக்கங்களிலும் வெண்ணிற கோடுகள் தோன்றும். இதை கட்டுப்படுத்த 4 கிலோ மியூரே ட் ஆப் பொட்டாஷ் ஐ , மண் (ம) இலை பரிசோதனைக்கு பின் பயன்படுத்தலாம். நைட்ரஜன் உரங்களை தாற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்.